**53. அருச்சுன சந்நியாசி கதை**

அருச்சுனன் பாண்டவர்களில் ஒருவன். விற்போர் முதலியவைகளிற் சிறந்தவன். இவனுக்குப் பத்துப் பெயர்கள் வரை உள்ளன. இவன் ஒருகால் ஒரு காரணத்தை முன்னிட்டுத் திருத்த நீர்ப்பயணஞ் சென்றான். பல ஆறுகளினும்



நீராடி இறுதியில்துவாரகையை அடைந்தான். கண்ணன் தங்கையாகிய சுபத்திரையின் அழை அறிந்து அவள்மேற் காதல்கொண்டான். அவளும் இவ மேற் காதல் கொண்டிருந்தாள். பலராமன் முதலியோ அவளைத் துரியோதனனுக்கு மணஞ் செய்ய எண்ணியிருந்தனர். துவாரகையை அடைந்தஅருச்சுனன் துறவுக் கோலம் பூண்டு தனியிடம் ஒன்றில் தங்கியிருந்தனன். அருச்சுன சந்நியாசியின் கருத்துச்சுபத்திரையைக் கைப் பற்றிச் செல்ல வேண்டுமென்பதே. கருத்தறிந்த கண்ணன் முதலியோர் இவனுக்குப்பணிபுரியுமாறு சுபத்தி ரையை அனுப்பினர். சுபத்திரை சின்னாள் அருச்சன சந்நியாசிக்குப் பணிபுரிந்திருந்தாள். சமயம் பார்த்து அருச்சுன சந்நியாசி சுபத்திரை உடன் கொண்டு சென்றான். பலராமன் முதலியோர் செய்தியை உணர்ந்து போலித் துறவியை எதிர்த்த னர். ஆயினும் பயன் யாதும் இல்லை. தவக்கோலத்தில்மறைந்து கொண்டு தவம் அல்லாத தீய செயல்களைப் புரிதல் மறைந்து வேடன் பறவைகளை வலை வீசிப் பிடித்தலைப் போன்றது என்பதை உலகம் அருச்சுனன் பால் உணர்ந்தது.

(பாரதம்)

(தவம்மறைந்து அல்லவைசெய்தல்]